| | |
|---|---|
| | **பொள்ளாச்சி நகராட்சி**<br>**31.08.2021 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில்**<br>**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**<br>**தீர்மான எண். 3001 முதல் 3028 முடிய** |
| **3001)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரம் செய்து அகற்றப்படும் பணிகளுக்கு வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் பற்றாக்குறை உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்களைக் கொண்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு கடந்த 05.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 31.08.2021 உடன் நிறைவடைய உள்ளது.<br>தற்போது தமிழகத்தில் கொரோனா வைரஸ் காய்ச்சலின் மூன்றாம் அலையினை தடுக்கும் பொருட்டு முழு ஊரடங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே இந்நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழ்களில் வெளியிடவும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் காலம் போதுமானதாக இல்லை என்பதால் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலையில் பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரம் செய்து அகற்றப்படும் பணிகளுக்கு வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் பற்றாக்குறை உள்ளதால் தற்காலிக ஓட்டுநர்களின் பணி அத்தியாவசியமாக தேவைப்படுவதால் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது வாகனங்களை இயக்க தற்காலிக ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அளித்து வரும் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்த பணி காலத்தினை மேலும் இரண்டு மாதங்களுக்கு 01.09.2021 முதல் 31.10.2021 வரை பணி நீட்டிப்பு செய்யவும் பணி நீட்டிப்பு காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்களின் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி முன் அறுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தற்போது தற்காலிக ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அளித்து வரும் திருவாளர்கள்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் அவர்களுக்கு பணிக்கால நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்- 567/2017/எச்2 |
| **3002)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான பொறியர் பிரிவில் இயங்கும் வாகன எண்: **TN 41 T 2983** வாகனத்தின் பேட்டரி மற்றும் செல்ப் மோட்டார் பழுதடைந்துள்ளது இதற்கு புதிய பேட்டரி மற்றும் செல்ப் மோட்டார் பொருத்தி ஆயில் சரிவீஸ் மற்றும் பழுதுகள் மேற்கொள்ளும் பணிக்கு **11.08.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><table><tr><td>**1**</td><td>**M/S: JD&CO,** பொள்ளாச்சி</td><td>**ரூ.26,950 /-**</td></tr><tr><td>**2**</td><td>ஷெரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொள்ளாச்சி.</td><td>**ரூ.29,500/-**</td></tr></table> |

| | |
|---|---|
| | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள **M/S:JD&CO,** பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. இப்பணிக்கு ஆகும் செலவினம் ரூ.30,000/- க்க நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S: JD&CO, பொள்ளாச்சி அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி, நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| **3003)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்.ஐ.ஜி காலனி I--ல் உள்ள தூங்குவாகை மரம் சாய்ந்து கீழே விழும் நிலையில் உள்ளது. எனவே அம்மரத்தினை வெட்டி எடுத்துக்கொள்ளும் பணிக்கு 17.08.2021 அன்று பொது ஏலம் நடைபெற்றதில் கலந்து கொண்ட இரண்டு ஏலதாரர்களின் உயர்ந்த பட்ச ஏல கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கலாம். |

| வ. எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச ஏல கேள்வி |
|---|---|---|
| 1 | A.ஜெயபாரதி,<br>2/84, ஊஞ்சவேலாம்பட்டி,<br>பொள்ளாச்சி. | ரூ.2800/- |
| 2 | குமார்,<br>67, உடுமலை ரோடு,<br>பொள்ளாச்சி. | ரூ.2500/- |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்காணும் இரண்டு ஏலக்கேள்விகளில் அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ள திருமதி.A.ஜெயபாரதி, பொள்ளாச்சி அவர்களின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
2. உயர்ந்தபட்ச ஏலதாரர் திருமதி.A.ஜெயபாரதி, பொள்ளாச்சி அவர்களின் ஏலத்தொகை ரூ.2800/- மற்றும் GST வரித்தொகை ரூ.336/- (செ.சீ.எண்.076/PMC/11/21-22/0001887, நாள்-17.08.2021) காப்புத்தொகை 500/- (செ.சீ.எண்.076/PMC/11/21-22/0001886, நாள்-17.08.2021) நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி உள்ளார்.
3. போக்குவரத்து மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு நலன் கருதி ஏலம் விடப்பட்டுள்ள மரங்களை உடனடியாக வெட்டி எடுத்துக் கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.4262/2021/இ2

| | |
|---|---|
| **3004)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகனம் எண் TN 41 AH 2012 வாகனத்திற்கு புதிய 7 டயர் டியூப் மாற்றம் செய்யும் பணிக்கு 12/08/2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் |

ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<u>ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,</u>

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | N.Mahalingam & Company, 102, Coimbatore road, Pollachi | ரூ. 1,23,500/- |
| 2 | A.Pichaikani, 11,Vibgyor Valley, Pollachi | ரூ. 1,24,800/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள N.Mahalingam & Company, 102, Coimbatore road, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய N.Mahalingam & Company, 102, Coimbatore road, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : எச்2/047/2021

**3005)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரானா வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்படாமல் இருக்க நகராட்சியில் இருப்புலுள்ள பொருட்களை (GI Sheet மற்றும் சவுக்கு பூட்டுகள்) கொண்டு தடுப்புகள் (Containment Zone) அமைத்தல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15-ன் கீழ் பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ்அன் கோ,<br>5, சக்தி கார்டன்,<br>பாலக்காடு ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 0.83% குறைவு. |
| 2 | திரு.G.விக்னேஷ்,<br>12/28, வேட்டைக்காரன் புதூர்,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 4.17% அதிகம். |
| 3 | திரு. சி.ராமகிருஷ்ணன்,<br>29/30, ஜெய பிரகாஷ் வீதி,<br>கோட்டூர் ரோடு,<br>பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலையை விட 10.83% அதிகம். |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மற்றதை விட குறைவாகவும்

| | |
|---|---|
| | மதிப்பீட்டு விலையை விட 0.83% குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்: கே.ஆர்.காளிதாஸ் அன் கோ அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.2427/2021/இ1 |
| 3006) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான சமத்தூர் இராமஐயங்கார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் சறுக்கு விளையாட்டு திடல் (skating) கட்டப்பட்டுள்ளது.<br>இந்த விளையாட்டு திடலின் மொத்த பரப்பளவு அளவு 92454 சதுர ஆகும். மேற்படி இடத்தில் விளையாட்டு திடல் கட்டப்பட்ட அளவு 40717.74 சதுரடி ஆகும்.<br>மேற்படி இடத்தினை ஒரு ஆண்டுக்கு குத்தகைக்கு விட ஏதுவாக இவ்வலுவலக ந.க.எண்.1888/21/அ6 நாள்.17.08.2021 அன்று குழு அமைத்து 19.08.2021ல் குழு கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.<br>1. வைப்புதொகை ரூ.50,000/-<br>2. கூடுதல் வைப்புத்தொகை ரூ.50,000/-<br>3. பயிற்சி கட்டணம் மாதம் நபர் ஒன்றுக்கு ரூ.500/-<br>4. உரிய நிபந்தனைகளுடன் ஓராண்டுக்கு மட்டும் ஆண்டு குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடலாம்.<br>மேற்கண்டவாறு குழு அறிக்கையின்படி ஓராண்டுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். இதற்கான மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1888/2021/அ6 |
| 3007) | பொள்ளாச்சி நகராட்சியில் டெங்கு தடுப்பு பணிகளுக்கு மற்றும் கோவிட்-19 காய்ச்சல் கணக்கெடுப்பு (FEVER SURVILLENCE WORKS-THERMAL SCANNING) மேற்கொள்ளவும் சுழற்சி முறையில் கொசுப்புழு உருவாவதினை தவிர்த்தல், அழித்தல் பணிகளை நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக நிறுவனங்கள் மற்றம் பொது இடங்களில் மேற்கொள்ள 300 குடியிருப்புகளுக்கு ஓர் நபர் வீதம் மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை மாவட்டம் அவர்கள் நிர்ணயித்துள்ள MAZDOOR தினக்கூலி அடிப்படையில் ரூ.400/- ESI,EPF,INSURANCE, பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் நிர்வாக செலவு உள்ளிட்ட DBC பணியாளர்கள் (வெளிக்கொணர்வு) OUT SOURCING முறையில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.486/- தினக்கூலி ஊதியத்தில் M/s SOUTHERN SOLID WASTE MANAGEMENT SERVICES நிறுவனம் 86 DBC பணியாளர்கள் தற்போது சப்ளை செய்கிறது. இவ் ஒப்பந்தம் 30.08.2021-உடன் முடிவடைகிறது.<br>இப்பணியாளர்கள் கோவிட்-19 தடுப்பிற்கு காய்ச்சல் கண்டுபிடிக்க THERMAL SCANNING மூலம் தினசரி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று |

| | |
|---|---|
| | காய்ச்சல் கண்ட நபர்கள் மற்றும் ILI எனப்படும் INFULUENZA LIKE ILLNESS சளிக் காய்ச்சல் உடல் வலி தலைவலி இதர அறிகுறிகள் உள்ளிட்ட நபர்களை கண்டறிந்து வர நன்கு பயிற்சி பெற்று நல்ல முறையில் நகராட்சிக்கு திருப்தி தரும் வகையில் பணிபுரிந்து வருகின்றனர்.<br>மேலும் தற்போது தென் மேற்கு பருவமழை காலமாக இருப்பதால் டெங்கு தடுப்பு கொசு ஒழிப்பு கொசுப்புழு தடுப்பு (அபெட்) மருந்து ஊற்றுதல் புகை மருந்து அடித்தல் மேலும் SOURCE REDUCTION எனப்படும் கொசு ஒழிப்பு பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு கோவிட்-19 தொற்று டெங்கு காயச்சல் நோய் கட்டுக்குள் இருக்க பெரிதும் துணை புரிந்துள்ளனர்.<br>தற்போது தமிழக அரசால் கோவிட்-19 தொற்று தடுப்பிற்காக தளர்வுடன் கூடிய ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு பின்பற்றப்படுகிறது. கோவிட்-19 தடுப்பு பணிகளுக்கு உரிய பயிற்சி பெற்ற நபர்களே தேவை என்பதாலும் ஒப்பந்தம் புதியதாக கோரப்பட்டால் கூடுதல் காலவிரயமும் உரிய பயிற்சி பெறாத பணியாளர்கள் கிடைக்கவும் வாய்ப்புள்ளது. மேலும் நகராட்சிக்கு ஒப்பந்தபுள்ளி கோருதல் மூலம் கூடுதல் செலவினம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இதனை தவிர்க்க தற்போது இந்நகராட்சிக்கு 86-DBC பணியாளர்கள் சப்ளை செய்து வரும் M/s சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட சர்வீசஸ் நிறுவன ஒப்பந்தத்தினை 01.09.2021 முதல் 30.11.2021 வரை 3 மாதகாலத்திற்கு தொடர்ந்து ஏற்கனவே உள்ள ஒப்பந்த நிபந்தனைகளின் படியும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் பொது சுகாதார நலன் கருதியும் கோவிட்-19 மற்றும் டெங்கு தடுப்பு அவசர அவசியம் கருதியும் ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும் இது குறித்த உரிய மேல் நடவடிக்கைகள் மேற் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு கூடுதலாக 3 மாதகாலத்திற்கு 01.09.2021 முதல் 30.11.2021 வரை பணி நீட்டிப்பு செய்யவும் முன் அனுமதி பெற்று அதற்கான பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்- 2476/2021/எச்3 |
| **3008)** | பொள்ளாச்சி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு பணிகளுக்கும், துப்புரவு பணிகளுக்கும், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும் அத்தியாவசியமாக தேவையான துப்புரவு பணியாளர்கள் தமிழ்நாடு அரசு உத்திரவு எண் 101/MAWS/1997 நாள்.30.04.1997-ன் படி இந்நகராட்சிக்கு (அனுமதிக்கப்பட்ட) அத்தியாவசியமாக தேவையான பணியாளர்கள் எண்ணிக்கை 392 ஆகும். தற்போது நிரந்தர பணியாளர்கள் நியமனம் நகராட்சியின் வருவாய் இனத்தில் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஊதியச் செலவினம் 49% அதிகமாக உள்ளதால் அரசு ஆணையின்படி புதிய நியமனமாக செய்ய இயலவில்லை.<br>எனவே OUTSOURCING முறையில் இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை, துப்புரவுப் பணிகள், உரக்கூடம் இயக்குதல், மற்றும் இதர அத்தியாவசியமான பணிகளுக்கு வெளி ஆட்கொணர்வு பணியாளர்கள் ஒப்பந்த முறையில் பெறப்பட்டு பொது சுகாதார பணிகள் நன்கு நடைபெற்று வருகிறது. இந்நகராட்சியில் ந.க.எண்.2477/2020/எச்3 நாள்.26.08.2020-ல் 76-துப்புரவு பணியாளர்களுக்கு ஒப்பந்த OUT SOURCING முறையில் பணியாளர்கள் சப்ளை செய்ய உரிய நகராட்சி விதிமுறைகள் பின்பற்றி பணியாணை |

(WORK ORDER) வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இவ் ஒப்பந்தம் 30.08.2021-உடன் முடிவடைய உள்ளது.

தற்போது கோவிட்-19 தொற்று பாதிப்பு தவிர்க்க தமிழக அரசு தளர்த்தப்பட்ட ஊரடங்கு பிறபித்து கொரோனா தொற்று கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. நோய் தடுப்பு பணிகளான பொது இடங்களில் கிருமிநாசினி தெளித்தல், சுத்தம் செய்தல், நோய் கண்ட இடங்களில் வீடுகளில் கிருமி நீக்கம் செய்யும் பணிகளுக்கும் அனைத்து துப்புரவு பணியாளர்களும் சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தற்போது உள்ள பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணகங்களுடன் கோவிட்-19 தொற்று தடுப்பு குறித்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் குறித்தும் முறையாக பயிற்சி அளிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்கள் அனைவரும் இப்பணிகளில் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளனர். உரமாக்கல் மையங்களில் MCC பணிபுரியும் பணியாளர்களுக்கும் முறையாக பயிற்சி வழங்கப்பட்டு நன்கு பணிபுரிந்து வருகின்றனர். மேலும் தற்போது உள்ள ஒப்பந்ததாரர் மூலம் பெறப்பட்டு வரும் அனைத்து பணியாளர்களும் தொடர்ந்து நல்ல முறையில் பணிபுரிந்து வருவதாலும் கோவிட்-19 தடுப்பு பணிகள் தொடர்ந்து தொய்வின்றி நடை பெற வேண்டியுள்ளதாலும் தற்போது உள்ள பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்தால் நோய் தடுப்பு பணிகள் தொய்வில்லாமல் விரைவில் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள இயலும். இதுவரை இந்நகராட்சி பணிகளுக்கு SOUTHERN SOLID WASTE MANAGEMENT SERVICE நிறுவனம் மூலம் 76-பணியாளர்கள் நல்ல முறையில் நகராட்சிக்கு திருப்தி தரும் வகையில் பணிபுரிந்து வந்துள்ளதாலும், பணியாளர்களின் பணிகள் தொடர்ந்து தேவையிருப்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் காய்ச்சலின் மூன்றாம் அலையின் தாக்கத்தினை தவிர்க்கும் பொருட்டு, ஊரடங்கு காலம் என்பதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஏற்படும் என்பதால் அதுவரை நகரில் அத்திவாசியமான பொது சுகாதார பணிகள் மற்றும் கோவிட்-19 தொற்று தடுப்பு பணிகள் தடையில்லாமல் தொடர்ந்து நடைபெற்று வரவும் வேண்டி தற்போது உள்ள ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் கோவை மாவட்டம் நிர்ணயித்துள்ள 2020-21-க்குரிய தினக் கூலி பணியாளருக்கான அடிப்படை நிர்ணய கூலி விகிதமான ரூ.450/- மற்றும் இதர EPE, ESI, ADMINISTRATION CHARGES, INSURANCE, SAFETY EQUIPMENTS உள்ளிட்ட பிற செலவுகளை உள்ளடக்கிய விபர பட்டியல் படி (பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) துப்புரவு பணியாளர் சப்ளை செய்ய நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.563/- வீதம் OUTSOURCING மூலம் (வெளி ஆட்கொணர்வு ஒப்பந்தம்) மூலம் 76 பணியாளர்கள் இந்நகராட்சிக்கு 01.09.2021 முதல் புதிய ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் முடிவடையும் வரையில் தற்போது உள்ள ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு 01.09.2021 முதல் புதிய ஒப்பந்தம் கோரி பணி ஆணை வழங்கும் வரையில் பணி நீட்டிப்பு செய்யவும் முன் அனுமதி பெற்று அதற்கான பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்-02477/2020/எச்3

| | |
|---|---|
| 3009) | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா கூடுதல் பேருந்து நிலையத்தில் 8X6 அளவில் LED சுவர் விளம்பர பலகை வைத்து விளம்பரம் மேற்கொள்வதற்கு அனுமதி கோரி Royal Enterprises நிறவனத்தினர் கோரியுள்ளனர்.<br>மேற்படி நிறுவனத்தினர் கோரியதை நேரடியாக வழங்க இயலாது இதற்கு ஓராண்டு வீதம் குததகை அடிப்படையில் வைப்புத் தொகை ரூ.10,000/- கூடுதல் வைப்புத் தொகை ரூ.15000/- நிர்ணயித்து பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியுடவும்,அதற்கான அனைத்து செலவினங்கள் மேறகொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2822/2021/அ6** |
| 3010) | நகராட்சிக்கு சொந்தமான பழைய பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடம் திரு.திருமூர்த்தி என்பவருக்கும் (வரி விதிப்பு எண்.076/13006) மற்றும் அக்கட்டிடத்தின் ஒரு பகுதி திருமதி.விஜயபிரபா (வரி விதிப்பு எண்.076/13007) என்பவருக்கும் குத்தகைக்கு விடப்பட்டு வாடகை தொகை செலுத்தப்படாததால் குத்தகை உரிமம் நகர் மன்ற தீர்மானம் எண்.2912, நாள்-30.06.2021ன்படி 01.06.2021 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் சென்னை, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடராமல் இருக்கும் பொருட்டு திரு.சீனிவாசன், வழக்கறிஞர் மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தில் கேவிட் மனு தாக்கல் செய்திடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேறகொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2371/2021/அ6** |
| 3011) | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேவாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகனம் எண் TN 41 AH 2012 (டிப்பர்) வாகனத்திற்கு பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- திற்கும், ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்- 3403/2021/எச்2** |
| 3012) | இந்நகராட்சியல பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற மற்றும் பணியிடை மரணமடைந்த பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி தொகை வழங்க கூடுதல் மதிப்பீடு ரூ.2,00,000/- அனுமதித்து வருவாய் நிதியிலிருந்து சிறப்பு சேமநலநிதி கணக்கு எண்.1228101021721க்கு தொகை ரூ.2,00,000/- மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்- 4048/2021/பி3** |
| 3013) | கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்க அரசு தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தின் பணியாளர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் அம்மா உணவகத்தில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு தேவையான கொரோனா நோய் தடுப்பு கவசங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/-க்கு மனற் அனுமதி வேண்டப்படுகிறது. |

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1955/2021/அ4**

**3014)** நகராட்சிக்கு சொந்தமான நாச்சிமுத்து பிரசவ விடுதியில் உள்ள இரண்டு சக்கர வாகன நிறுத்தம் ரூ.8/- மதிப்புள்ள கட்டண சீட்டு வரிசை எண்.126201 முதல் 176200 வரை 50,000 எண்ணிக்கையில் கட்டணச் சீட்டு அச்சிட்டு வழங்கிட 15.07.2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | ஆதவன் ஒன் ஸ்டாப் பிரிண்ட் ஸ்ஷாப் | 8500.00 |
| 2. | ஏ.ஆர்.பிரிண்ட் டெக் | 9000.00 |
| 3. | யுனிவர்சல் ஆப்செட் பிரிண்டர்ஸ் | 9500.00 |

மேற்காண் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி கட்டணச் சீட்டு வ.எண்.1,21,001 முதல் 1,26,200 வரை 5200 கட்டண சீட்டுகள் ஆதவன் ஒன் ஸ்டாப் பிரிண்ட் ஸ்ஷாப் மூலம் 07.07.2021ல் அச்சிடப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளகிளில் ஆதவன் ஒன் ஸ்டாப் பிரிண்ட் ஸ்ஷாப் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி தொகையாக ரூ.8500/-க்கு கேட்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.
3. அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கோரிய ஆதவன் ஒன் ஸ்டாப் பிரிண்ட் ஸ்ஷாப் பட்டியல், நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1552/2018/டி1**

**3015)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, மகாலிங்கபுரம், நேரு வீதியில் உள்ள திருமதி.வள்ளிநாயகம் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வாடகைதாரர் திரு.ராஜாசிங்பிரதீப் என்பவரால், பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு O.S.No.126/2021 மற்றும் I.A.No.2/2021 நகராட்சி ஆணையர் அவர்களை இரண்டாம் பிரிதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை நகராட்சி நிலை சட்ட ஆலோசகர் திரு.K.சம்பத்குமார் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2126/2021/ஜி1**

**3016)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகனம் எண்.TN 41AM 2687 வாகனத்திற்கு (Tipper Lorry) பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 12.08.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும்

| | |
|---|---|
| | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>**<u>ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.</u>**<br><table><tr><th>வ. எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th></tr><tr><td>1.</td><td>M/s.ஜே.டி.அன் கோ,<br>160, கோவை ரோடு,<br>பொள்ளாச்சி</td><td>ரூ. 1,45,140/-</td></tr><tr><td>2.</td><td>P.B.Sheriff Auto Diesel works<br>25/67. ABT Road,<br>POllachi.</td><td>ரூ. 1,51,040/-</td></tr></table><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி அன்ட கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி.அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்.3160/2021/எச்2** |
| **3017)** | **பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழியாற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, சுத்திகரிப்பு செய்து, நகருக்கு நீரேற்றம் செய்ய ஏதுவான மின் மோட்டார் பம்புகள் மற்றும் மின்சாதனங்கள் இயங்க தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து உயர்மின் அழுத்த இணைப்பு (HTSC 73) பெறப்பட்டுள்ளது. இம்மின் இணைப்பு மூலம் 22 KV உயர்மின் அழுத்தம் பெறப்பட்டு, மின் சாதனங்கள் இயங்க தாழ்வழுத்தமாக மாற்ற 8 Pole Structure, Transformers மற்றும் Panel Board கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதனை மின் ஆய்வாளர், கோவை அவர்களால் வருடாந்திர ஆய்வு செய்து, தற்போதுள்ள மின் விதிகளின் படி பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு அறிக்கை அளித்திட Order No.UDL 671/E1/CBE (South)/R30/DR/20-21 dt.29.03.2021 கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார். உயர்மின் இணைப்பில் மின்சாதனங்கள் இயக்குவதற்கு மின் ஆய்வாளரின் சான்று அவசியம் வேண்டியுள்ளதால், மேற்காண் மின்இணைப்பில் உள்ள 8 Pole Structure, Transformers மற்றும் Panel Board களின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>**1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனமதிக்கலாம்.**<br>**3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண்.825/21/இ3** |

**3018)** பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழியாற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, சுத்திகரிப்பு செய்து, நகரில் உள்ள மார்க்கட்ரோடு நீர் உந்து நிலையத்திற்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. நீருந்து நிலையத்திலிருந்து நகரில் உள்ள நீர்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்ய ஏதுவான மின் மோட்டார் பம்புகள் மற்றும் மின்சாதனங்கள் இயக்க தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து உயர்மின் அழுத்த இணைப்பு (HTSC-188) பெறப்பட்டுள்ளது. இம்மின் இணைப்பு மூலம் 22 KV உயர்மின் அழுத்தம் பெறப்பட்டு, மின் சாதனங்கள் இயங்க தாழ்வழுத்தமாக மாற்ற 6 Pole Structure, Transformers மற்றும் Panel Board கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதனை மின் ஆய்வாளர், கோவை அவர்களால் வருடாந்திர ஆய்வு செய்து, தற்போதுள்ள மின் விதிகளின் படி பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு அறிக்கை அளித்திட Order No.PYK 1456/E1/CBE (South)/R30/DR/20-21 dt.29.03.2021 கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார். உயர்மின் இணைப்பில் மின்சாதனங்கள் இயக்குவதற்கு மின் ஆய்வாளரின் சான்று அவசியம் வேண்டியுள்ளதால், மேற்காண் மின்இணைப்பில் உள்ள 6 Pole Structure, Transformers மற்றும் Panel Board களின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.826/21/இ3

**3019)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான ராமய்ய கவுண்டர் லே அவுட் சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் தேங்கி சுகாதார கேடு ஏற்பட்டு நோய் பரவும் சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.5.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**3020)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகனம் எண்.TN 41AE 3843 வாகனத்திற்கு பழுது பார்த்தல் மற்றும் தகுதிச்சான்று பெறும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

**<u>ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.</u>**

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | M/s.ஜே.டி.அன் கோ, | ரூ. 1,42,190/- |

| | | |
|---|---|---|
| | 160, கோவை ரோடு,<br>பொள்ளாச்சி | |
| 2. | P.B.Sheriff Auto Diesel works<br>25/67. ABT Road,<br>POllachi. | ரூ. 1,50,450/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி அன்ட கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி.அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.2424/2021/எச்2**

**3021)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் எஸ்.ஆர் லே அவுட் முகப்பில் பழுதடைந்த சிறுபாலத்தினை அகற்றி புதிதாக அமைத்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 12.08.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.18% குறைவு. |
| 2. | திரு.சி.ராமகிருஷ்ணன், கோட்டூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.87% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.18% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.18% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 3017/2021/இ1**

**3022)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான

அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் உயர் மின்னழுத்த அளவு மானியில் பழுதடைந்த மின் சாதனங்களை புதிதாக மாற்றுதல் பணிக்கு ரூ0.95 இலட்சம் மதிப்பீட்டிற்கு 02.06.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| **1.** | M/s.B&G Construction, Mettur. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவு. |
| **2.** | Thiru.sree Power Engineers, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.56% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.B&G Construction, Mettur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.15% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.B&G Construction, Mettur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2064/2021/இ1

**3023)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் சாலையிலுள்ள மாட்டுச்சந்தை வளாகத்தில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் தங்கும் கூடாரம் மற்றும் குடிநீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு 04.08.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு. |
| 2. | திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.62% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05%

| | |
|---|---|
| | குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 3014/2021/இ1 |
| 3024) | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வெங்கடேசாகாலனி மற்றும் மகாலிங்கபுரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் புணரமைப்பு செய்தல் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 12.08.2021 ஆம் தேதியில் இரண்டாம் அழைப்பாக மறுஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br><br>1. M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவு.<br>2. திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.87% அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 0421/2021/இ1 |
| 3025) | பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் பல்வேறு திட்டங்களின் கிழ் சாலைப் பணிகளும், ஜோதி நகரில் பூங்கா அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேற்காண் பணிகள் நடைபெறும் இடங்களை அவ்வப்போது பார்வையிட வேண்டியுள்ளது. மேலும், பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகளும் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை பார்வையிட ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) முறையில் தொழில்நுட்ப உதவியாளர்களை வைத்து பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காண் தொழில் நுட்ப உதவியாளர்களை பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலைபட்டியல் (Shedule of Rates 2020-21) –ன் படி ESI, EPF மற்றும் Insurance உடன் சேர்த்து பணியினை |

| | |
|---|---|
| | **மேற்கொள்ள 18.08.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.**<br>**அதுசமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மூலம் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் Out sourcing முறையில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒவ்வொரு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மிகவும் மாறுபட்டு உள்ளதாகவும் ஊதியம் விலை நிர்ணயத்தில் வேறுபாடுகள் உள்ளதாகவும் அதை சரி செய்ய 30.07.2021-ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் Video conference நேர்பட ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.**<br>**எனவே, இப்பணிக்கான வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை நடைமுறைப்படுத்த இயலாத சூழ்நிலை ஏற்படுமாயின் ஏற்கனவே உள்ள தொழில்நுட்ப பணியாளர்களின் மூலமாக நடைபெறும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அதே ஒப்பந்ததாரர் M/S.Green dream அவர்களுக்கு நகர் மன்ற தீர்மான எண்.2566, நாள்.30.12.2020-ன் படி ஒப்புதல் வழங்கப்பட்ட விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள அதே இனங்களுக்கு பணி மேற்கொள்ள ரூ.2.10 இலட்சத்திற்கு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய இரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து தரவும் மேற்காண் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>2. **இப்பணியின் அவசர அவசியம் கருதி, முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.** |
| **3026)** | **பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம் மற்றும் நீர்த்தேக்க வளாகங்களில் தேவையான பணியாளர்கள் தற்சமயம் போதிய அளவில் இல்லாததால் மேற்காண் இடங்களில் காவலர் பணியினைத் தலைமை காவலர்கள் பணியாட்களை வெளியாட்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி (Out sourcing) அடிப்படையில் குடிநீர் பாதுகாப்பு, விநியோகப்பணிகளுக்கு பணியாளர்களை அமர்த்த மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களின் செயல் முறை ஆணை எண்.7547/2020/இ3, நாள்.20.09.2020-ன் படி ரூ.22.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணியினை மேற்கொள்ள 26.07.2021-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதுசமயம் 31.07.2021-ல் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களது தலைமையில் Video conference நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம் திருப்பூரில் நடைபெற்றது. ஆய்வுக்கூட்டத்தில் தற்பொழுது உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர்பணி, பாதாளசாக்கடை பணி, சுகாதாரப்பணி மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு போன்றவற்றில் போதிய நிரந்தர பணியாட்கள் இல்லாததால் தொய்வின்றி பணி நடைபெற வெளியாட்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி வருவது முரண்பாடாகவுள்ளது. எனவே, தேவைப்படும் பணியாட்கள் விகிதம் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஆகியவற்றில் ஒவ்வொரு நகராட்சிக்கும் மாநகராட்சிகளுக்கும் மிகவும் வித்தியாசம் உள்ளது என தெரிவிக்கப்பட்டது.**<br>**அதுசமயம் 26.07.2021-ல் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து 11.08.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட 31.07.2021-ல் Video conference தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படி இப்பணிக்கான உரிய Format விரைவில் அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டது எனவே, இப்பணிக்கான பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைப்படுத்த இயலாத சூழ்நிலை ஏற்படுமாயின் பொதுமக்களின் வாழ்வாதாரமான குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்கும் பொருட்டு** |

| | |
|---|---|
| | ஏற்கனவே உள்ள பணியாட்களின் மூலமாக குடிநீர் விநியோகம் நடைபெற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அதே ஒப்பந்ததாரர் M/S.Green dreams அவர்களுக்கு நகர் மன்ற தீர்மான எண்.2620, நாள்.30.12.2020-ன் படி ஒப்புதல் வழங்கப்பட்ட விலைவிகிதத்தில் அதே இனங்களுக்கு ரூ.8.00 இலட்சத்திற்கு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய இரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து தரவும் மேற்காண் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இக்குடிநீர் பணியின் அவசியம் கருதி இப்பணிக்காக தொடரப்பட்ட நடவடிக்கைகளுக்கு முன் அனுமதி வழங்கலாம். |
| 3027) | பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் பல்வேறு திட்டங்களின் கிழ் சாலைப் பணிகளும் ஜோதி நகரில் பூங்கா அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேற்காண் பணிகள் நடைபெறும் இடங்களை அவ்வப்போது பார்வையிட வேண்டியுள்ளது. மேலும், பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகளும் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை பார்வையிட ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) முறையில் தொழில்நுட்ப உதவியாளர்களை வைத்து பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காண் தொழில் நுட்ப உதவியாளர்களை பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலைபட்டியல் (Shedule of Rates 2020-21) –ன் படி ESI, EPF மற்றும் Insurance உடன் சேர்த்து பணியினை மேற்கொள்ள 18.08.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br>அதுசமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் மூலம் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் Out sourcing முறையில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒவ்வொரு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மிகவும் மாறுபட்டு உள்ளதாகவும், ஊதியம் விலை நிர்ணயத்தில் வேறுபாடுகள் உள்ளதாகவும், அதை சரி செய்ய 30.07.2021-ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் Video conference ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதன்பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அறிவிப்பு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பட்டடது. இதன்காரணமாக 18.08.2021-ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நிலுவையில் வைக்கப்பட்டது. ஆகவே, இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 3028) | பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம் மற்றும் நீர்த்தேக்க வளாகங்களில் தேவையான பணியாளர்கள் தற்சமயம் போதிய அளவில் இல்லாததால் மேற்காண் இடங்களில் காவலர் பணியினை வெளியாட்கள் மூலம் (Out sourcing) முறையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்கள் செயல்முறை ஆணை எண்.7457/2021/இ3 நாள்.20.09.2020-ன் படி ரூ.22.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணியினை மேற்கொள்ள 26.07.2021-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 11.08.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br>அதுசமயம் 31.07.2021-ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது |

| | |
|---|---|
| | **Video conference** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் திருப்பூரில் நடைபெற்றது. அதில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர்பணி, பாதாளசாக்கடை பணி, சுகாதாரப்பணி மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ள போதிய நிரந்தரப்பணியாட்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் **(Out sourcing)** முறையில் தேர்ந்தெடுத்து பணியினை மேற்கொண்டு வருவதில் முரண்பாடுகள் உள்ளதாகவும், ஒவ்வொரு மாநகராட்சிகளிலும் மற்றும் நகராட்சிகளிலும் வெளியாட்கள் மூலம் பணியமர்த்தும் பணியாட்கள் மற்றும் அவர்களது ஊதியத்தில் வேறுபாடு உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரேமாதிரியான முறையில் (தேவைப்படும் பணியாட்கள் அதற்குரிய ஊதியம்) பணியமர்த்த **Video conference** ஆய்வுக்கூட்டத்தில் அதற்குரிய திட்டப்பட்டியல் **Formate** அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதன்பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் கலந்து ஆலோசித்ததன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின் அறிவிப்பு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பட்டடது. இதன்காரணமாக **11.08.2021**-ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நிலுவையில் வைக்கப்பட்டது. அதன்பின் இப்பணி தொடர்பான அறிவுரைகள் வரப்பெற்றது. ஆகவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் ரத்து செய்து இப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதி வழங்கலாம். |